தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, நவம்பர் 25, செவ்வாய்க்கிழமை

கார்த்திகை 10, அட்சய, திருவள்ளுவர் ஆண்டு-2017

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்''

தீய செயல்கள் தீயவைகளையே விளைவிக்கும் தன்மை உடையவைகளாக இருத்தலால் அத்தீய செயல்கள் தீயைவிட கொடுமையாகக் கருதி அஞ்சப்படும்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

நுகர் பொருள் வாணிபக் கழகங்களில் குழுக்கள்

164— (*வினா எண். 3618) திரு. மு. தங்கமணி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நுகர்பொருள் வாணிபக் கழகங்களில் வட்ட, மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. மு. தங்கமணி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது வட்ட, மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கும் உத்தேசம் இல்லை என்று குறிப்பிட்டார்கள் நாட்டில் தற்போது அத்தியாவசியப் பொருள்களாகக் கருதப்படுகிற அரிசி, சர்க்கரை, எண்ணெய் போன்றவைகள் எல்லாம் நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகத்தான் வழங்கப் படுகின்றன. அவ்வாறு வழங்கும்போது அதன் காரணமாகப் பிரச்சினைகள் எழுகின்றன. எனவே அப்பிரச்சினைகளைத் தீர்த்து, பொதுமக்களுக்கும் நிர்வாகத்திற்கும் ஒரு நல்ல சுமுக உறவை ஏற்படுத்த இப்படிப்பட்ட குழுக்கள் சிறப்பாகப் பணியாற்ற வாய்ப்பாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் மீண்டும் அப்படிப்பட்ட குழுக்கள் அமைக்கப் பரிசீலனை செய்ய முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 25

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நியாயவிலைக் கடைகளைப் பொறுத்தவரை விழிப்புப் பணிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. வட்ட அளவில் அமைப்பது பற்றி அரசின் ஆலோசனையில் உள்ளது. மாவட்ட அளவைப் பொறுத்தவரை கோவை மற்றும் சேலம் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்ட கண்காணிக்கும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்டு நுகர்வோர் பாதுகாப்புக் குழு ஒன்றை அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது வட்ட அளவில் குழுக்கள் அமைக்க இருப்பதாகச் சொன்னார்கள். மாவட்ட அளவில் மாநிலம் முழுவதும் இத்தகைய குழுக்களை அமைக்கும் போது அதில் சட்டப் பேரவை உறுப்பினர்களும் இடம் பெறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை உறுப்பினர்கள் இடம் பெறக்கூடாது என்பதற்கு விதிமுறை ஏதுமில்லை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் அமைக்கப் படுகிற இத்தகைய குழுக்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் அளிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழு உறுப்பினர்கள் அத்தகைய கடைகளைப் பார்க்க வேண்டும். கடைகளுக்கு வருகிற பொருள்கள் பதிவேடுகளில் சரியாக எழுதப்படுகின்றனவா என்று பார்க்க வேண்டும். அவைகளின் இருப்பு குறித்து கடைகளில் விநியோகிப்பதற்கு முன்னால் கண்காணிப்புக் குழுவினரின் கையெழுத்தைப் பெற்றாக வேண்டும். அதற்குப் பிறகுதான் பொருள்களை விநியோகிக்க வேண்டும். கடைகளைக் கண்காணிப்பதோடு பொதுமக்கள் கடைகளின் செயல்பாடு குறித்து குறைபாடுகள் தெரிவித்தால் அவற்றைப் பற்றி அரசுக்குத் தகவல் தெரிவிக்கிற வகையில் அதிகாரம் அளிக்கப் பட்டிருக்கிறது. இது ஒரு விஜிலென்ஸ் கமிட்டி போன்றது.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் "மாவட்ட அளவில் அமைக்கப்படக் கூடிய குழுக்களில் சட்ட சபை அங்கத்தினர்கள் அங்கம் பெறக்கூடாது என்று இல்லை" என்று டபுள் நெகடிவ்வில் பதில் அளித்தார்கள். மாவட்ட அளவில் அமைக்கப்படும் குழுக்களில் குறைந்த பட்சம் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த எம்.எல்.ஏ.க்களில் ஒருவரையாவது நியமிக்க அரசு முன்வருமா? இது கட்சிக்குப் பிரதிநிதித்துவம் என்ற அடிப்படையில் கேட்கப்படவில்லை. பொதுஜன

1986 நவம்பர் 25]

இயக்கத்தை நடத்திக் கொண்டிருப்பவர்களே அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள்தான். ஆகவே, அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். சட்ட சபை உறுப்பினர்கள் இடம் பெற்றால் இங்கே இருக்கும் சட்ட சபைக்கும் அமைச்சருக்கும் இந்த விவரங்களைக் கொண்டு வந்து சொல்வதற்கு வசதியாக இருக்கும் என்ற வகையில் இந்த யோசனை கவனத்தில் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழு அமைக்கப்படும் முறை, அதனுடைய பணிகள் ஆகியவை நீண்ட பட்டியலாக அரசு ஆணையில் வெளியிடப்பட்டிருக்கின்றன. அது அவ்வளவையும் சொல்வதென்றால் அது மிகப் பெரிய பதிலாக இருக்கும். நியாய விலைக் கடைகள் இருக்கும் பகுதிகளில் வசிக்கும் பொது நலத்தில் ஆர்வம் உடையவர்கள், முந்தைய அரசியல் தலைவர்கள், மருத்துவர், வழக்கறிஞர் மற்றும் சமுதாயத்தில் நலிந்த பிரிவினரைச் சார்ந்த பெரியவர்கள் ஆகியவர்களை இந்தக் குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கலாம். ஆகவே நாம் எல்லாம் பொது நலத்தில் ஆர்வமுடையவர்கள் என்று எடுத்துக்கொள்ளலாம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள், மருத்துவர்கள், இன்னும் பிற பொது நல ஊழியர்கள் கொண்ட கண்காணிக்கும் குழு மிக அருமையாகப் பணி செய்து கொண்டிருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஏனெனில், அவருடைய பதிலில் அது இல்லை. அந்த நிலையை அறிந்து உணர்ந்து மாநிலம் முழுவதும் அது போன்ற குழுக்களை அமைத்து அதை ஒழுங்குபடுத்தும் வழிமுறைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையினர் தந்த தகவலைவிட மாண்புமிகு உறுப்பினர் தந்த தகவல் எனக்குக் கூடுதலாக இருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

வாலாஜாபேட்டை தாலுக்கா, பூண்டி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களுக்கு குடிநீர்த் திட்டம்.

165— (*வினா எண் 3920) திரு. மா. கதிர்வேலு: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜாபேட்டை தாலுக்காவில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவு நீரால் பாதிக்கப்பட்ட பூண்டி, அதனை சுற்றியுள்ள கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கூட்டு குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?